நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.

நாள். 04.11.2020.

# மன்றக் கூட்ட அறிவிப்பு

2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் நாள். 04.11.2020 சார்வரி வருடம் ஐப்பசி 19ம் நாள் புதன் கிழமை மாலை 5.00 மணிக்கு கீழ்கண்ட பொருட்களைப் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

1. **பொருள் :–** இந்நகராட்சி ஆணையாளர் திரு.ர.அசோக்குமார் அவர்களின் அக்டோபர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.களண். 468/2020/சி1)

**தீர்மான எண்:** 965
**தீர்மானம்** : பார்வையிடப்பட்டது.

2. **பொருள் :–** இந்நகராட்சி பொறியாளர் திருமதி.ந.சண்முகவடிவு அவர்களின் அக்டோபர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.களண். 573/2020/சி1)
**தீர்மான எண்:** 966
**தீர்மானம்** : பார்வையிடப்பட்டது.

3. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் வணிக வளாகத்தில் உள்ள கடை எண்.2ஜ திரு. V.மாந்தன் என்பவர் மாத வாடகை ரூ.6,900/–க்கு உரிமம் பெற்று கடை நடத்தி வந்தார். தற்பொழுது மேற்படி கடையை ஒப்படைப்பதாக மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**
மேற்படி கடைக்கு வாடகைத் தொகை மற்றும் மின்கட்டணத் தொகையும் நிலுவையின்றி உரிமதாரரால் செலுத்தப்பட்டுவிட்டது. எனவே மேற்படி மனுவின் அடிப்படையில் மேற்படி கடையின் உரிமத்தினை இரத்து செய்திடவும் மறு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் கோரிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1491/2011/அ2)
**தீர்மான எண்:** 967
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள உணவு விடுதி திரு.ராஜாங்கம் என்பவர் மாத வாடகை ரூ.13,554/–க்கு உரிமம் பெற்று கடை நடத்தி வந்தார். தற்பொழுது மேற்படி கடையை ஒப்படைப்பதாக மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**
மேற்படி கடைக்கு வாடகைத் தொகை மற்றும் மின்கட்டணத் தொகையும் நிலுவையின்றி உரிமதாரரால் செலுத்தப்பட்டுவிட்டது. எனவே மேற்படி மனுவின் அடிப்படையில் மேற்படி

கடையின் உரிமத்தினை இரத்து செய்திடவும் மறு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் கோரிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1536/2020/அ2)
**தீர்மான எண்: 968**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. <u>**பொருள்**</u> **:–** பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.1ஐ திரு.M.சுருளிமஸ்தான் என்பவர் மாத வாடகை ரூ.2300/–க்கு 01.07.2019 முதல் 30.06.2022 வரை உரிமம் பெற்று கடை நடத்தி வந்தார். தற்பொழுது அக்டோபர் 2020 உடன் கடையை ஒப்படைப்பதாக 27.10.2020 மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> **:–**

மேற்படி மனுவின் அடிப்படையில் மேற்படி உரிமத்தினை இரத்து செய்திடவும், நிலுவையாக உள்ள வாடகைத் தொகையினை உரிமதாரரின் பொறுப்புத் தொகையில் இருந்து ஈடு செய்யவும் மேற்படி கடையின் உரிமத்தினை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் கோரிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1549/2020/அ2)
**தீர்மான எண்: 969**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

6. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட வணிக வளாக கடைகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் வரை உள்ள காலத்திற்கு 28.10.2020ம் தேதி நடைபெற்ற பொது ஏலத்தில் ஏலம் கோரிட எவரும் முன்வரவில்லை. அன்றைய தினம் கீழ்க்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வணிக வளாகம் மற்றும் கடை விபரம் | முகவரி | மாத வாடகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1) | 2) | 3) | 4) | 5) |
| 1 | தென்கரை புதுப்பாலம் நீறுற்று நிலைய வணிக வளாக முதல் தளம் கடை எண்.16 | 1) S. பூவிழி<br>க/பெ. சிவராமன்<br>23, தெற்கு புதுத்தெரு<br>தென்கரை, பெரியகுளம் | ரூ. 1300/– | அதிகம் |
| | | 2) M.A. நாராயணன்<br>கிருஷ்ணன் கோவில் தெரு,<br>பெரியகுளம் | ரூ.1150/– | குறைவு |
| 2 | தென்கரை புதுப்பாலம் நீறுற்று நிலைய வணிக வளாக முதல் தளம் கடை எண்.17 | 3) M. மணிகண்டன்<br>வாகம்புளி ,<br>தென்கரை, பெரியகுளம் | ரூ. 1150/– | குறைவு |
| | | 4) பூவிழி<br>க/பெ. சிவராமன்<br>23, தெற்கு புதுத்தெரு<br>தென்கரை, பெரியகுளம் | ரூ.1300/– | அதிகம் |
| | தென்கரை | 5) S. பூவிழி | | அதிகம் |

| வ. எண். | வணிக வளாகம் மற்றும் கடை விபரம் | முகவரி | மாத வாடகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1) | 2) | 3) | 4) | 5) |
| 3 | புதுப்பாலம் நீறுற்று நிலைய வணிக வளாக முதல் தளம் கடை எண்.18 | க/பெ. சிவராமன்<br>23, தெற்கு புதுத்தெரு<br>தென்கரை, பெரியகுளம் | ரூ. 1300/– | |
| | | 6) S. பாலன்<br>16, தெற்கு புதுத்தெரு<br>தென்கரை, பெரியகுளம் | ரூ.1150/– | குறைவு |
| ` 4 | சித்தா மருத்துவமனை வணிக வளாகம் முதல் தளம் கடை எண்.6 | 7) ஆஷிக்ராஜா<br>1/309–6 சுந்தர்ராஜ் நகர்<br>ஸ்டேட் பாங்க் காலனி<br>பெரியகுளம் | ரூ. 1400/– | அதிகம் |
| | | 8) M. அகமது பௌஜிதீன்<br>த/பெ.முபராக் அலி<br>18, பெத்தகாளை சந்து<br>வடகரை, பெரியகுளம் | ரூ.1300/– | குறைவு |
| 5 | புதிய பேருந்து நிலைய வணிக வளாகம் கடை எண்.5 | 9) R. செல்வராஜ்<br>த/பெ.ரகுபதி<br>121, பகவதியம்மன் கோவில் தெரு,<br>வடகரை, பெரியகுளம் | ரூ. 2000/– | குறைவு |
| | | 10) A. செல்லத்துரை<br>த/பெ. ஆபிரகாம்<br>40, வடக்கு பூந்தோட்டத் தெரு<br>வடகரை, பெரியகுளம் | ரூ.2300/– | அதிகம் |
| 6 | புதிய பேருந்து நிலைய வணிக வளாகம் கடை எண்.17 | 11) P. செல்வம்<br>த/பெ. பரமசிவம் பிள்ளை<br>20/39 வரதப்பர் தெரு,<br>வடகரை, பெரியகுளம் | ரூ. 3000/– | அதிகம் |
| | | 12) R. கணபதி<br>த/பெ. ரமேஷ்<br>131/2, தெற்கு ரதவீதி<br>தென்கரை, பெரியகுளம் | ரூ.2800/– | குறைவு |
| 7 | மகப்பேறு மருத்துவமனை முதல் தளம் அலுவலக வளாகம் .1 | 13) E. அஜித்<br>த/பெ. ஈஸ்வரன்<br>61, ராஜா ரைஸ்மில் 3வது தெரு<br>சின்னமனூர் | ரூ. 3500/– | அதிகம் |
| | | 14) K. பாரதி<br>த/பெ. கணேசன்<br>32/1 கோட்டை மேட்டுத் தெரு<br>பெரியகுளம் | ரூ.3300/– | குறைவு |
| 8 | மகப்பேறு மருத்துவமனை முதல் தளம் அலுவலக வளாகம் | 15) E. அஜித்<br>த/பெ. ஈஸ்வரன்<br>61, ராஜா ரைஸ்மில் 3வது தெரு<br>சின்னமனூர் | ரூ. 3500/– | அதிகம் |

| வ. எண். | வணிக வளாகம் மற்றும் கடை விபரம் | முகவரி | மாத வாடகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1) | 2) | 3) | 4) | 5) |
| | .2 | 16) S. விஜய்<br>த/பெ. சிவகாமி<br>124,ஸ்டேட் பாங்க் காலனி கீழவடகரை, பெரியகுளம் | ரூ.3350/– | குறைவு |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்காணும் வணிக வளாக கடைகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திருமதி.S.பூவிழி என்பவரும் வ.எண்.2–ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திருமதி.S.பூவிழி என்பவரும் வ.எண்3ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திருமதி.S.பூவிழி என்பவரும் வ.எண்4ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திரு. ஆஷிக்ராஜா என்பவரும் வ.எண்5ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திரு.A.செல்லத்துரை என்பவரும் வ.எண்6ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திரு.P.செல்வம் என்பவரும் வ.எண்7ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திரு.E.அஜித் என்பவரும் வ.எண்8ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு திரு.E.அஜித் என்பவரும் அதிகப்பட்ச தொகைக்கு மேற்படி கடைகளை மாத வாடகைக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரியுள்ளதால் மேற்காணும் நபர்களுக்கு (ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) உரிமம் ஒப்படைக்க மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.களண். 1491/2011/அ2)

**தீர்மான எண்:** 970

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி தென்கரை வார்டு எண்.17, சுதந்திரவீதி ஆடுபாலம் அருகில் உள்ள பொதுக் கழிப்பிட கட்டிடம் தற்போது பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட இந்நகர்மன்றத் தீர்மான எண். 949 நாள்.01.10.2020ல் அனுமதி பெறப்பட்டது. மேலும் மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலுகம், மதுரை அவர்களின் செயல்முறை ந.க.எண்.1772/2020/பி2 நாள்.10.10.2020ல் மேற்படி 24.30 ச.மீ. பரப்பில் அமைந்துள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பறை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட அனுமதி பெறப்பட்டது. அதன்படி உரிய வழிமுறைகளை பின்பற்றி கட்டிடத்தினை இடிக்க 23.10.2020ம் தேதியன்று பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஏலதாரர்கள் கலந்து கொண்டனர்.

| வ.எண். | ஏலதாரர்கள் விபரம் | ஏலக் கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு.A. சையது ஆசிக்,<br>சின்ன கோட்டை மேடு தெரு,<br>வடகரை, பெரியகுளம் | 5,300 /– |
| 2. | முகமது இஸ்மாயில்,<br>கோட்டை மேடு தெரு,<br>வடகரை, பெரியகுளம் | 5,250 /– |
| 3. | M/s. C. நல்லகுரும்பன் & கோ,<br>ஸ்ரீராம் நகர்,<br>தேனி | 5,150 /– |

மேற்கண்ட ஏலதாரர்களில் உயர்ந்த ஏலக் கேள்வி கோரிய திரு.A. சையது ஆசிக், என்பவருக்கு கழிப்பறை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :—**

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி சுதந்திரவீதியில் உள்ள பொதுக்கழிப்பறை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட பொது ஏலம் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்டவாறு பொது கழிப்பறை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள உயர்ந்த ஏலக் கேள்வி கோரிய திரு.A. சையது ஆசிக் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1360/2020/இ1)
**தீர்மான எண்:** 971
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

8. **பொருள் :—** பெரியகுளம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் **01.03.2016** முதல் **31.03.2017** வரை M/s. சடையாண்டி ஏஜன்ஸிஸ், ஆண்டிபட்டி நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொண்ட காலத்திற்கு விற்பனை வரியினை செலுத்தக் கோரி மேற்படி நிறுவனத்திற்கு உதவி ஆணையர், மத்திய விற்பனை மற்றும் சேவை வரி மற்றும் மத்திய கலால், திண்டுக்கல் அவர்களால் அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு எதிர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(M.D.) No.15302/2020ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு மூன்றாவது எதிர்வாதுரையாக நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு.V.ஜெயப்பிரகாஷ் நாராயணன், மாநில அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்கு நடத்தப்பட்டு வருவதற்கு வழக்கறிஞர் கட்டணத் தொகை ரூ.**9,500/—**ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :—**

மேற்படி செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1613/2020/இ1)**
**தீர்மான எண்:** 972
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

9. **பொருள் :—** இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு **2020—21—**க்கான கணினி இரசீதுகள், எழுதுபொருட்கள் மற்றும் பாரங்கள், படிவங்கள், கோயம்புத்தூர் பிரிண்டர் சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ.ஆப்.கூட்டுறவு நிறுவனத்திலிருந்து அச்சடித்து பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**6.00** லட்சம் (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

அனுமதிக்கலாம்.
(ந.களண். 1587/பி2/2020)

**தீர்மான எண்:** 973
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தினசரி குடிநீர் வழங்கும் பொருட்டு குடிநீர் ஆதாரமான கொடைக்கானல் பேரிஜம் ஏரியின் மூலம் தண்ணீர் சோத்துப்பாறை அணையின் மூலமாக இந்நகராட்சியில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ள தலைமைக் குடிநீர் நிலையத்திற்க்கு கொண்டு வரப்பட்டு குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு நகர்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு நாள் ஒன்றுக்கு / நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணி, தெருவிளக்குகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு ஆண்டு மின் கட்டணமாக ரூ. 45.20 இலட்சம் மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது.

பொது பிரிவு, குடிநீர் பிரிவு மற்றும் பாதாள சாக்கடை பிரிவுகளுக்கான செலவு வரவினைக் காட்டிலும் கூடுதலாக ஆண்டு தோறும் ஏற்படுகிறது. தற்போது குடிநீர் பிரிவு வரவு மின்கட்டணம் செலுத்துவதற்கு போதுமானதாக இல்லை. இதை தவிர குடிநீர் பராமரிப்பு செலவு, பணியாளர்களுக்கு ஊதியம், குடிநீர் விநியோகம் பணிக்கு பெறப்பட்ட கடன் தவணைகள் செலுத்த இயலாத நிலை தொடர்ந்து ஏற்படுவதால், இந்நகராட்சி மூலம் 31.10.2020ம் தேதி வரை மின்சார வாரியத்திற்கு ரூ.34.39இலட்சம் மின் கட்டணம் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி மின்கட்டண நிலுவைத் தொகை ரூ.34.39 இலட்சத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் முழு மான்யமாக வழங்கக் கோரி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் நிதி, பாதாள சாக்கடை நிதி கணக்கு பற்றாக்குறையில் தொடங்கி பற்றாக்குறையில் முடிவடைவதால் நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு பெரியகுளம் நகராட்சிக்கு மின் கட்டண நிலுவைத் தொகை ரூ.34.39 இலட்சத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் முழு மான்யமாக வழங்க நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 547/2020/இ1)**

**தீர்மான எண்: 974**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

11. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பயன்பாட்டிலுள்ள TN60AE3100 LCV வானத்தில் டீசல் பம்ப் பழுதடைந்தமையால் பொது சுகாதார அவசர அவசியம் NRI Automobile Solutions, Theni நிறுவனம் மூலம் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு வாகன ஓட்டுநர் பட்டியல் சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்படி பழுது நிக்கப்பணிகள் மேற்கொண்டமைக்கு தொகை ரூ.4427/–ஐ (ரூபாய் நான்காயிரத்து நானூற்று இருபத்து ஏழு மட்டும்) NRI Automobile Solutions, Theni நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : –

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடன் பணிமேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கூறப்பட்ட பணிக்கான செலவினம் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.731/2019/எச்1)**
**தீர்மான எண்: 975**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

12. <u>பொருள்</u> :– இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் மக்கும் குப்பைகளை அரைத்து பாத்தி அமைப்பதற்கு பயன்படும் TN60D3845 Front Loader Organic Pulveriser Tractor-ல் ஆயில் மாற்றம் பணிகள் மற்றும் ஹைட்ராலிக் பம்ப் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகளை உள்ளூர் பணிமனையான அரசு அங்கீகாரம் பெற்ற பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், பெரியகுளம் நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உடன் பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.731/2019/எச்1)**
**தீர்மான எண்: 976**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

13. <u>பொருள்</u> :– இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோன தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை பணியாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் நகரின் முக்கிய பகுதியான மார்க்கெட் பகுதியில் ஒரு நாளுக்கு ரூ.120/– வீதம் 30 நாட்களுக்கு ஒலிபொருக்கி மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்கு தொகை ரூ.3600/– (ரூபாய் மூன்றாயிரத்து அறநூறு மட்டும்) பரிமளம் எலக்ட்ரிக்கல்ஸ் அன்டு ரேடியோஸ், உரிமையாளர் திரு.சின்னமுனியாண்டி அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.506/2020/எச்1)**
**தீர்மான எண்: 977**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

14. <u>பொருள்</u> :– இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண். TN60A3022 டிப்பர் லாரியில் செல்ப்மோட்டார் பழுது ஏற்பட்டமையால் மேற்படி பழுதுநீக்கப்பணி பொதுசுகாதார அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், பெரியகுளம் நிறுவனம் மூலமாக மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு தொகை ரூ.2900/– (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், கம்பம் ரோடு, பெரியகுளம் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உடன் பணிமேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2904/2016/எச்1)
**தீர்மான எண்:** 978
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

15. <u>பொருள்</u> :– இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண். TN60A3022 (மினி லாரி) தகுதிச்சான்று (F.C) 2020ம் ஆண்டிற்கு முடிவடைவதால், 2020–2021ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு தேவையான பழுதுபணிகளை சரிசெய்ய தேவையான உத்தேச செலவினம் தொகை ரூ.99,500/– (ரூபாய் தொன்னூற்று ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்) ஆகும் என ஓட்டுநர் தெரிவித்துள்ளார். மேற்படி வாகனத்தில் ஓட்டுநர் தெரிவித்துள்ள பழுது பணிகளை மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், கம்பம் ரோடு, பெரியகுளம் மூலமாக பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2904/2016/எச்1)
**தீர்மான எண்:** 979
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

16. <u>பொருள்</u> :– இந்நகராட்சியில் பணிபுரியும் சீருடை பெற தகுதியான பணியாளர்களுக்கு 2021ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சீருடைகள் மற்றும் காலனிகள் அரசு நிறுவனமான கோ–ஆப் டெக்ஸ், மதுரை மூலமாக வாங்கவும், அதற்கான தையல் கூலி மொத்தம் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2956/2015/எச்1)

**தீர்மான எண்:** 980
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

17. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள TN60H 4800 ஜெட்ராடிங் வாகனம் மூலம் இந்நகராட்சி பகுதியில் உள்ள புதைவடிகால் மேன்ஹோல்கள் மற்றும் குழாய்களில் அடைப்பு எடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி வாகனத்தில் Jetting மற்றும் Suctioning- ல் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த இயலாமல் உள்ளதால், மேற்படி வாகனத்தில் தேவையான அனைத்து பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண்.950 நாள்.01.10.2020ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி 16.10.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான TN60H4800 ஜெட் ராட் வாகனத்திற்கு தேவையான அனைத்து பழுது நீக்கப் பணிகள் செய்தல் | ரூ.2.50 லட்சம் | Whale Enterprise Private Limited, 1/1d, Vilandurichi road, near senthottam, Kalapatti, Coimbatore<br>ரூ.2,48,921/– | Whale Enterprise Private Limited, 1/1d, Vilandurichi road, near senthottam, Kalapatti, Coimbatore<br>ரூ.2,48,921/– |
| 2. | | | Bharath Industries, 6,Kasthuripalayam Road, M.G.R. Nagar, Kuttai Thottam, Jothipuram, coimbatore<br>ரூ.2,70,436/– | |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Whale Enterprise Private Limited, Coimbatore நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மேற்காணும் பணிக்கு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Whale Enterprise Private Limited, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் நகரின் புதைவடிகால் சாக்கடை அடைப்புகள் உடனுக்குடன் அகற்றி சுகாதாரமாக வைத்திட வேண்டிய பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட வாகனத்திற்கு பழுது நீக்கப்பணிகள் செய்திட பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.களண். 1357/2020/இ1)

**தீர்மான எண்: 981**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

18. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி அனைத்து பகுதிகளிலும் உள்ள புதைவடிகால் நீரினை வடகரை மயானக்கரை ரஸ்தா பகுதியில் உள்ள கழிவுநீர் உந்து நிலையத்தின் மூலம் எண்டப்புளி பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. மேற்படி கழிவுநீர் உந்து நிலையத்தில் புதைவடிகால் நீரினை வெளியேற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் 80 ஹெச்.பி. சப்மெர்சிபல் பம்ப் பழுது ஏற்பட்டுள்ளதால் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேலும் தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கி மழை பெய்து வருவதால் மேற்படி பழுதினை உடனடியாக பழுது நீக்கப் பணிகள் செய்ய வேண்டி பணியினை மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1581/2020/இ1)

**தீர்மான எண்: 982**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

19. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் புதுப்பித்தல் உரிமம் 20.03.2020ம் தேதியன்று உரிமம் முடிவுற்றது. மீண்டும் 3 ஆண்டுகளுக்கு (21.03.2020 முதல் 20.03.2023 வரை) உரிமம் புதுப்பிக்க தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு இந்நகராட்சி வருவாய் ஆய்வர் மூலம் 12.02.2020ம் தேதிய கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி கடிதத்தின்படி வட்டார போக்குவரத்து அலுவலக இயக்க ஊர்தி ஆய்வாளர்(நிலை–II) அவர்களால் 06.03.2020 அன்று பேருந்து நிலையத்தில் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் பேருந்து நிலைய சுவர்களுக்கு வண்ணம் பூசுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பேருந்து நிலைய சுவர்களுக்கு வண்ணம் பூசும் பணி மேற்கொள்ள மேற்படி கோப்பு 10.03.2020 அன்று பொறியியல் பிரிவுக்கு அனுப்பப்பட்டது.

மேலும் 27.03.2020ம் தேதிய இயக்க ஊர்தி ஆய்வாளர் அவர்களின் ஆய்வில் பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலில் பெயர் பலகை வைக்கவும், பேருந்தின் மேல் சரக்கு ஏற்ற ஏணி வசதி செய்யவும், பேருந்துகளின் கால அட்டவணை தயார் செய்திடவும் அறிவுறுத்தியதன் பேரில் பொறியியல் பிரிவிற்கும் 07.04.2020 குறிப்பு வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தற்பொழுது வரை புதிய பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை.

இந்நிலையில் மேற்படி புதிய பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு.L. பெரியசாமி என்பவர் 2018–2019 முதல் உரிமம் பெற்று கட்டணம் வசூல் செய்து வருகிறார். மேற்படி பேருந்து நிலைய உரிமம் 20.03.2020 உடன் முவுற்றதால் நுழைவு கட்டணம் வசூல் செய்ய இயலவில்லை. மேலும் கொரோனா நோய் தொற்று காரணமாக 25.03.2020 முதல் மாநிலம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பொது போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தால் பேருந்துகள் ஏதும் இயங்கவில்லை. ஆதனால் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்ய இயலவில்லை. ஆதலால் மேற்படி உரிமத்தை ஒப்படைப்பதாக உரிமதாரர் மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி மனுவின் அடிப்படையில் மேற்படி உரிமத்தினை 2020–2021ம் ஆண்டு முதல் இரத்து செய்தும், மேற்படி பேருந்து நிலைய உரிமம் புதுப்பிக்கப்பட்ட உடன் மறு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் கோரிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2652/2018/அ2)

**தீர்மான எண்: 983**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

20. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான திருவள்ளுவர் பின்புறம் உள்ள கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமத்தை திரு.S.அய்யனார் என்பவர் ஒப்பந்தப்புள்ளி மூலம் 01.04.2019 முதல் உரிமம் பெற்று கட்டணம் வசூல் செய்து வருகிறார். தற்பொழுது கொரோனா தொற்று காரணமாக பொது ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் மேற்படி கழிப்பறை செயல்படவில்லை, எனவும் அக்டோபர் முதல் மேற்படி கட்டண கழிப்பறை செயல்பட்டு வருதாகவும், இருப்பினும் மக்கள் சமூக இடைவெளியை கடைபிடிப்பதாலும் பொது கழிப்பறை பயன்படுத்துவதால் கொரோனா நோய் தொற்று ஏற்படும் என அச்சப்படுவதாலும் மேற்படி கழிப்பறைக்கு மக்கள் குறைந்த அளவினரே வருகின்றனர். மேலும் மேற்படி கழிப்பறையின் மேற்கூரை மிகவும் பழுதடைந்திருப்பதால் கழிப்பறையை பயன்படுத்த பொதுமக்கள் மிகவும் அச்சப்படுவதால் மக்கள் வர தயங்குகின்றனர். இதனால் குறைந்த அளவே கட்டணத் தொகை வசூலிக்க இயலுகிறது.

அவ்வாறு வசூலிக்கப்படும் கட்டணத்தொகையை கொண்டு மேற்படி கழிப்பறையை பராமரிக்கவும், மின் கட்டணம் செலுத்தவும் போதுமானதாக இல்லை. ஆகவே இந்த வருடம் 5 மாத காலத்திற்கும் மேலாக கட்டண கழிப்பறை பொது ஊரடங்கினால் செயல்படாததால் நடப்பாண்டிற்கு குத்தகை தொகையை என்னால் செலுத்த இயலாது. எனவே மேற்படி உரிமத்தினை இவ்வருடம் ரத்து செய்திடுமாறு உரிமதாரர் மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேற்படி மனுவின் அடிப்படையில் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் மேற்படி உரிமத்தினை 2020–2021ம் ஆண்டு முதல் இரத்து செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u>:–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2652/2018/அ2)

**தீர்மான எண்: 984**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

21. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணி மேற்கொள்ள 19 எண்ணிகையிலான Battary Operated Vehicle வாங்கப்பட்டு பொதுசுகாதாரப்பிரிவு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு பழுதுபணிகளை சரிசெய்து பயன்பாட்டில் இருக்கும் வகையில் ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.3,80,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கூறப்பட்ட பணிக்கான செலவினம் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.348/2017/எச்1)**

**தீர்மான எண்: 985**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

22. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி வார்டு எண்.06 முதல் 30 வரையிலான 25 வார்டுகளில் பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் நகராட்சி உரக்கிடங்கில் உரம் தயாரிக்கும் பணிகள் செய்வதற்கு 75 துப்புரவு பணியாளர்கள் கொண்டு தனியார்மயம் மூலம் மேற்கொள்ள நகர்மன்றம் தீர்மானம் எண்.723, நாள்.28.08.2019ன்படி அனுமதி பெறப்பட்டு 23.10.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த விநாயகா ஆண்கள் சுயஉதவிக்குழு, பெரியகுளம் நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளியானது நகர்மன்றம் தீர்மானம் எண்.766, நாள்.08.11.2019ன்படி அனுமதிக்கப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 10.11.2019 முதல் 09.11.2020 வரையான ஓராண்டு காலத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறப்பட்ட ஆணையாளர் அவர்களின் வேலை உத்தரவின்படி விநாயகா ஆண்கள் சுயஉதவிக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியானது 09.11.2020ம் தேதியன்று முடிவடைய உள்ளது. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.0370/2019/எச், நாள்.23.10.2020ன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் தேனி அவர்களின் 2020–2021ம் ஆண்டிற்கான தினக்கூலி விலைவிகித பட்டியல் வழங்கக்கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளும் தூய்மை பணியாளர்களின் நலன்கருதி 2020–2021ம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி விலைவிகித பட்டியல் பெறப்பட்டவுடன் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதுவரை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் நிறுவனமான விநாயகா ஆண்கள் சுயஉதவிக்குழு, பெரியகுளம் அவர்கள் மூலமாக மூன்று மாதங்களுக்கு

மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.12,00,000/– ( ரூபாய் பனிரெண்டு இலட்சம் மட்டும்) மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : –**

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வில்லாமல் நடைபெறும் பொருட்டு கூடுதலாக 4 மாதத்திற்கு அதே நிபந்தனைகளுக்குட்பட்டு அதே விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கூறப்பட்ட பணிக்கான செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம்அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0370/2019/எச்1)**
**தீர்மான எண்: 986**
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) ர. அசோக்குமார்**
**தனி அலுவலர்**

/உண்மை நகல்/

**ஆணையாளர்**
**பெரியகுளம் நகராட்சி**